செய்தி வெளியீடு எண்:- 693 22.8.2008

# அரசு செய்தி வெளியீடு – 22.8.2008

இன்றையதினம் நாளேடு ஒன்றில் – விழுப்புரம் மாவட்டம், செஞ்சி அருகே உள்ள சாத்தனந்தல் கிராமத்தைச் சேர்ந்த குப்பம்மாள், ஜெயாராணி, மற்றும் குழந்தைகள் அர்ச்சனா, அபிநயா, பிரியா ஆகியோர் காது கேளாதவர்கள் என்றும், வாய் பேச முடியாதவர்கள் என்றும், அவர்கள் குடும்பம் அரசு உதவிக்காகப் பல ஆண்டுகளாக காத்திருப்பதாகவும், ஆனால் செஞ்சியை அடுத்த பென்னகரில் பார்வையிழந்த சந்திரன் குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து பேருக்கு அரசு உதவி கிடைத்துள்ளது என்றும் செய்தி வந்துள்ளது.

இந்தச் செய்தியைப் படித்த மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவரை தொலைபேசி வாயிலாகத் தொடர்பு கொண்டு, சாத்தனந்தல் கிராமத்தைச் சேர்ந்த ஐந்து பேரில் ஊனமுற்றோருக்கான மாதாந்திர உதவித் தொகை அளிக்கும் திட்டத்தின்கீழ் பெரியவர்களுக்கு மாதம் 400 ரூபாய் உதவி அளித்திடுவதற்கான ஆணையினை இன்றைய தினமே பிறப்பிக்க வேண்டுமென்றும், இந்த மாதம் முதற்கொண்டே இந்த உதவித் தொகை அவர்கள் குடும்பத்திற்குக் கிடைத்திட வேண்டுமென்றும், பள்ளியிலே படிக்கும் மூன்று குழந்தைகளுக்கும் தேவையான உதவிகளை செய்திட வேண்டுமென்றும் – இது போலவே மற்ற மாவட்டங்களிலும் பாதிக்கப்பட்டவர்களுக்கான கோரிக்கைகள் இருக்குமே யானால், அவற்றையும் உடனடியாக கவனித்து உதவிகளை உடனடியாகச் செய்வதற்கான ஏற்பாட்டினை அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும் செய்திட வேண்டுமென்றும் ஆணையிட்டுள்ளார்கள்.

***

**வெளியீடு, இயக்குநர்,**
**செய்தி, மக்கள் தொடர்புத் துறை,**
**தலைமைச் செயலகம், சென்னை-9**